# மெட்ரோ பணி முடிந்தது போக்குவரத்து சீரானது

**சென்னை, ஆக. 1–**

நந்தனம் சந்திப்பில், மெட்ரோ பணிகளுக்காக, ஒரு வழிப்பாதையாக மாற்றியிருந்த போக்குவரத்து, பணி நிறைவு பெற்றதால், தற்போது, மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியது.



சென்னை பெருநகர காவல் போக்குவரத்து, தெற்கு மாவட்ட எல்லைக்குட்பட்ட, அண்ணாசாலை, நந்தனம் சந்திப்பில், 2011ல் துவங்கிய மெட்ரோ ரயில் பணிகளுக்காக, போக்குவரத்து, ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது.

தற்போது பணிகள் முடிந்த நிலையில், கடந்த, 26ம் தேதி முதல், மீண்டும், பழைய போக்குவரத்து முறையில், சோதனை ஓட்டம் நடந்தது. இது வாகன ஓட்டிகளிடையே, வரவேற்பை பெற்றது. இதையடுத்து, போக்குவரத்து மாற்றம் தொடரும் என, போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது.

- அண்ணாசாலையில், சைதாப்பேட்டையில் இருந்து தேனாம்பேட்டை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும், நந்தனம் சந்திப்பில் நேராகவும், இடதுபுறம் திரும்பி வெங்கட் நாராயணா சாலை வழி மற்றும் வலதுபுறம் திரும்பி சேமியர் சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.
- அண்ணாசாலையில், தேனாம்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரும் அனைத்து வாகனங்களும், வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்படுகிறது.
- சேமியர் சாலையில் இருந்து வரும் வாகனங்கள், நந்தனம் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி, சைதாப்பேட்டை நோக்கியும், வலதுபுறம் திரும்பி அண்ணாசாலைக்கும் மற்றும் நேராக வெங்கட் நாரயணா சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.
- வெங்கட் நாராயணா சாலையில் இருந்து வரும் வாகனங்கள், நந்தனம் சந்திப்பில் இருந்து இடதுபுறம் திரும்பி, அண்ணா சாலைக்கும், வலதுபுறம் திரும்பி சைதாப்பேட்டை நோக்கியும் மற்றும் நேராக சேமியர் சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.